
பல்கலைக்கழக மானியக்குழு நிதி நல்கையுடன்

தேசியக் கருத்தரங்கம்

# இலக்கியங்களில் பன்முகப் பார்வை

நாள் : 19.02.2019

ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு



முதுகலைத் தமிழ்த்துறை

**ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**

தேசியத் தர மதிப்பீட்டின் அடிப்படையில் 'முதல்' தர நிர்ணயம் பெற்றது

DST FIST Supported College

கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது

பெரியகுளம் - 625 601, தேனி மாவட்டம்

இணையதளம் : www.annejac.com மின்னஞ்சல் : jactam@annejac.com

# இலக்கியங்களில் பன்முகப்பார்வை

(ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு)

ஆண்டு : பிப்ரவரி 2019

**பொருள்**

தமிழ் இலக்கியங்களில் காணலாகும் திறன்களை
ஆய்வு செய்தல்

**வெளியீடு**

முதுகலைத் தமிழ்த்துறை
ஜெ.அ. மகளிர் தன்னாட்சிக் கல்லூரி
பெரியகுளம், தேனி மாவட்டம்.

**ISBN 978-93-86146-29-8**

பக்கங்கள் : XVI + 268

**வடிவமைப்பு & அச்சாக்கம்**

அக்கா அச்சகம்
ஜெ. அ. மகளிர் தன்னாட்சிக் கல்லூரிவளாகம்,
பெரியகுளம், தேனி மாவட்டம்.

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| 1. | கிறித்தவக் காப்பியங்களின் கருத்தியல்<br>முனைவர் குளோரியா வி. தாஸ் | 01 |
| 2. | நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும் நல்வழி<br>முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி | 05 |
| 3. | வாஸந்தியின் புதினத்தில் பெண்ணியப் பார்வை<br>மு.கவிதா | 12 |
| 4. | பெண்கள் - அன்றும் இன்றும்<br>மா. பாண்டீஸ்வரி | 18 |
| 5. | ஏலாதி கூறும் அறம்<br>முனைவர் மா. முத்துவிஜயலட்சுமி | 23 |
| 6. | தேன் மழையில்-மரபும் புதுமையும்<br>முனைவர் சி. கௌசல்யா | 30 |
| 7. | விவிலியம் உணர்த்தும் உளவியல்<br>அருட்சகோதரி முனைவர். இருதய கலைச்செல்வம் | 35 |
| 8. | பாரதிதாசனின் பன்முகப்பார்வை<br>முனைவர் ஞா. பிரான்சிஸ் கேதரின் | 41 |
| 9. | நாட்டுப்புறப் பாடல்களில் பெண்கள் சந்திக்கும் குடும்ப வன்முறை<br>அருட்சகோதரி முனைவர் லூ. சகாயலில்லி | 46 |
| 10. | மேலாண்மை பொன்னுசாமி சிறுகதைகளில் கதை மாந்தர்கள்<br>வே. புளோரா பவுலின் மேரி | 54 |
| 11. | "அலைகளும் ஆழங்களும்" குறும் புதினத்தில் பெண்ணின் அகஉலகம்<br>செ. லிட்டில் ப்ளவர் | 61 |
| 12. | தேம்பாவணியில் எண்வகை மெய்ப்பாட்டுச் சுவை<br>முனைவர் செ. ரெஜினா | 70 |
| 13. | தேடும் அன்பு<br>அருட்சகோதரி முனைவர் இ. அல்போன்சாள் | 76 |

# 2. நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும் நல்வழி

**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி**
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)
மதுரை - 625 018

**முன்னுரை**

மக்களின் வாழ்க்கையில் உள்ளதை உள்ளவாறு படைத்துக் காட்டுபவை இலக்கியங்கள் ஆகும். தமிழர்களின் வாழ்க்கை நோக்கங்களை உணர்த்தும் மிகச் சிறந்த கண்ணாடி இலக்கியம் என்று கூறலாம். அவ்வக்காலச் சமுதாய நிலையினை எளிதாக அறியத் துணை செய்பவை இலக்கியங்களே. சங்க இலக்கியம், சங்க மருவிய கால இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பிய இலக்கியம், சிற்றிலக்கியம், இக்கால இலக்கியம் என வளர்ந்து வருகின்ற இலக்கிய வகைமைகளுள் பிற்கால நீதி நூல்களுக்கும் இடம் உண்டு. அவ்வகையில் தோன்றிய பிற்கால நீதி நூல்களில் ஒன்றான 'நல்வழி' கட்டுரைப் பொருண்மைக்கு உரிய தரவாக அமைகின்றது.

**நல்வழி**

நன்மை தரும் நல்ல ஒழுக்க வழிகளைக் கூறும் நூல். சிறுவர்கள் எளிதில் பொருள் உணர்ந்து படிக்கும் வகையில் ஔவையாரால் எழுதப்பட்டுள்ளது. ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை ஆகிய நூல்களின் வரிசையில் தோன்றிய நூல் நல்வழி ஆகும். நாற்பது வெண்பாக்களை உடையது. இந்நூலில் இடம் பெற்றுள்ள பாடல்கள் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும் விதம் குறித்துக் காண்போம்.

**உழவுத்தொழில்**

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று உணவு ஆகும். உணவை உற்பத்தி செய்து கொடுக்கின்றவர்கள் உழவர்கள் ஆவர். வான்புகழ் வள்ளுவரும் 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' (குறள்.1032) என்றார். உழவர்கள் சேற்றில் கால் வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் ஆதலால் 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' (குறள்.1031) என்றார். திணை அடிப்படையிலான சமூக அமைப்பில் வேட்டைத் தொழிலின் அடுத்த கட்ட வளர்ச்சி வேளாண்மை ஆகும்.